1981 ஜனவரி 27]

முடியும். ஆகவே, அந்த அடிப்படையிலே, இதை வேகமாக, அதே நேரத்தில், குறைந்த விலையிலே மக்களுக்கு அந்த மருந்துகளை அளிக்கக் கூடிய வகையில், எந்த அளவு நாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Auto analyser wing in Madras Medical College

*Q. No. 56— THIRU : T.R. RAJARAM: Will the hon. the Minister for Health be pleased to state :

(a) whether an Auto analyser wing has been opened in the Madras Medical College during 1980 ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,94,000 செலவில் ஆட்டோ அனைலைசர் வாங்கப்பட்டு ஜூன் 1980 முதல் பயோகெமிஸ்டிரி பிரிவில் பயன்படுத்தப்படுகிறது.

கடையநல்லூரில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கல்.

*வினா எண் 57—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கெட்டுப்போன நூல்கள் கொடுக்கப்பட்டு வருவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், நல்ல உயர்ரக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தமிழ் நாட்டில் இயங்கும் எல்லா கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கும் வழங்கப்படுவது போலவே கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் தரமான நூலே வழங்கப்படுகிறது. கெட்டுப்போன நூல்கள் ஏதும் வினியோகிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.